# விவேகானந்த கல்லூரி

**பல்கலைக்கழக மானியக்குழுவால் ஆற்றல்சார் கல்லூரி அந்தஸ்து வழங்கப்பெற்றுள்ளது**

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட, தன்னாட்சி பெற்ற குருகுல வாழ்க்கைப் பயிற்சி நிறுவனம்

தேசியதர நிர்ணயக்குழுவால் (NAAC) மறுமதிப்பீடு செய்யப்பெற்று 'A+' கிரேடு (CGPA 3.33 out of 4.00) தகுதி வழங்கப்பெற்றுள்ளது

DBT நட்சத்திர கல்லூரி திட்டத்திற்கு நிதியளிக்கப்பெற்றது

(மேலாண்மை: ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, திருச்சிமாவட்டம்)

திருவேடகம் மேற்கு - 625 234, மதுரை மாவட்டம், தமிழ்நாடு.

இணையதள முகவரி: www.vivekanandacollege.ac.in தொலைபேசி எண்கள்: 04543-258234, 7540060257


# குருகுலச் சுடர்


**தீபம் - 9 சுடர் - 1 ஜூன் 2025**






# விவேகானந்த கல்லூரி

**பல்கலைக்கழக மானியக்குழுவால் ஆற்றல்சார் கல்லூரி அந்தஸ்து வழங்கப்பெற்றுள்ளது**

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட, தன்னாட்சி பெற்ற குருகுல வாழ்க்கைப் பயிற்சி நிறுவனம்

தேசியதர நிர்ணயக்குழுவால் (NAAC) மறுமதிப்பீடு செய்யப்பெற்று 'A+' கிரேடு (CGPA 3.33 out of 4.00) தகுதி வழங்கப்பெற்றுள்ளது

DBT நட்சத்திர கல்லூரி திட்டத்திற்கு நிதியளிக்கப்பெற்றது

(மேலாண்மை: ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, திருச்சிமாவட்டம்)

திருவேடகம் மேற்கு - 625 234, மதுரை மாவட்டம், தமிழ்நாடு.

இணையதள முகவரி: www.vivekanandacollege.ac.in தொலைபேசி எண்கள்: 04543-258234, 7540060257

**தீபம் - 9 சுடர் - 1 ஜூன் 2025**


## கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வுகள்



- 12.06.2025 அன்று, IQAC ஆதரவுடன், திருவேடகம் விவேகானந்த கல்லூரி உலக குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு நாளை நினைவுகூரும் வகையில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்கள் ஏற்படுத்தியது.
- 14.06.2025 அன்று 2025 – 2026 ஆம் கல்வியாண்டுக்கான பாடத்திட்டம் துறைகளின் ஒருங்கிணைப்பு, வரவிருக்கும் நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்கள் குறித்த ஆலோசனைக் கூட்டம் கல்லூரியின் செயலர் சுவாமி வேதானந்த மற்றும் கல்லூரியின் குலபதி சுவாமி அத்யாத்மானந்த ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது. இதில் கல்லூரியின் முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.
- 15.06.2025 அன்று முதலாமாண்டு மாணவர்களின் பெற்றோர் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கல்வி தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டு, மாணவர்களுக்கான வழிகாட்டுநர் & அறிவுரைப் பகர்வோர் அறிமுகப்படுத்தப்பட்டனர். மேலும், மாணவர் நலன் மற்றும் கல்லூரி வளங்கள் குறித்து விளக்கப்பட்டன.






- 16-06-2025 முதல் 18-06-2025 வரை மூன்று நாட்கள் அனைத்துத் துறைகளிலும் முதலாம் ஆண்டு இளநிலை மாணவர்களுக்குத் "தொடர்புப் பாடநெறி" நடத்தப்பட்டது.
- 16-06-2025 மற்றும்17-06-2025 ஆகிய இரு நாட்கள் அனைத்துத் துறைகளிலும் இரண்டாம் ஆண்டு இளநிலை மாணவர்களுக்கு மாணவர் அறிமுகப் பயிற்சி நடைபெற்றது.

- 16-06-2025 மற்றும்17-06-2025 ஆகிய இரு நாட்கள் அனைத்துத் துறைகளிலும் மூன்றாமாண்டு இளநிலை மாணவர்களுக்கு வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

## தமிழ்த்துறை

- தமிழ்த்துறை மற்றும் அகத்தர உறுதி மைய ஒருங்கிணைப்பில் தொடர்ச் சொற்பொழிவு நிகழ்வு 16.06.2025, திங்கட்கிழமை அன்று மாலை 6:30 மணியளவில், கல்லூரி இறைவழிபாட்டுக் கூடத்தில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த இசைக்கலைமணி இராஜபாளையம் உமாசங்கர் (இசைஆசிரியர்) “இசைபட வாழ்வோம்“ என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.
- 16.06.2025 அன்று பிற்பகல் கல்லூரியில் புதிதாகச் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவர்களுக்குப் பொது அறிமுக வகுப்பு தமிழ்த்துறை சார்பில் நடத்தப்பட்டது. தமிழ்த்துறைத் தலைவர் (பொ) முனைவர் கு.இராமர் “இலக்கியச் செயற்பாடுகள்“ என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.



- 16.06.2025 அன்று முற்பகல் கல்லூரியில் இரண்டாமாண்டு பயிலும் மாணவர்களுக்குத் திறன்மேம்பாட்டுப் பயிற்சி தமிழ்த்துறை சார்பில் வழங்கப்பட்டது. முனைவர் கோ.பாலமுருகன் “உள்வாங்கும் மொழித்திறன்கள்“ என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.
- 17.06.2025 அன்று முற்பகல் கல்லூரியில் புதிதாக சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவர்களுக்குப் பொது அறிமுக வகுப்பு தமிழ்த்துறை சார்பில் நடத்தப்பட்டது. முனைவர் சு.முத்தையா “வெளியிடும் மொழித்திறன்கள்“ என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.
- தமிழ்த்துறை மற்றும் அகத்தர உறுதி மைய ஒருங்கிணைப்பில் தொடர்ச் சொற்பொழிவு நிகழ்வு 17.06.2025, செவ்வாக்கிழமை அன்று மாலை 6:30 மணியளவில், கல்லூரி இறைவழிபாட்டுக் கூடத்தில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த முனைவர் மகா சுந்தர் (செயலர், தமிழ்ச்சங்கம், புதுக்கோட்டை) “வெற்றிக்கொடி கட்டு“ என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.
- தமிழ்த்துறை மற்றும் அகத்தர உறுதி மைய ஒருங்கிணைப்பில் தொடர்ச் சொற்பொழிவு நிகழ்வு 18.06.2025, புதன்கிழமை அன்று மாலை 6:30 மணியளவில், கல்லூரி இறைவழிபாட்டுக் கூடத்தில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த முனைவர் பாகை இரா.கண்ணதாசன் (தமிழ்த்துறைத் தலைவர், ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை) “கனவு மெய்ப்படும்“ என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.
- 18.06.2025 அன்று முற்பகல் கல்லூரியில் புதிதாக சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவர்களுக்குப் பொது அறிமுக வகுப்பு தமிழ்த்துறை சார்பில் நடத்தப்பட்டது. முனைவர் ரெ.சுதாகர் வடிவேலு “கலைகள் மற்றும் மொழித்திறன்கள்“ என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

## ஆங்கிலத் துறை

- 12.06.2025 முதல் 14.06.2025 வரை மூன்று நாட்கள் “போட்டித் தேர்வுகளுக்கான ஆங்கில மேம்பாட்டு முகாம்“ மூன்றாமாண்டு ஆண்டு பயிலும் இளநிலை மாணவர்களுக்கு ஆங்கிலத் துறையால் நடத்தப்பட்டது. இம்முகாமின் இயக்குநராக ஆங்கிலத்துறைத் தலைவர் முனைவர் எஸ். பாரதிராஜா பணியாற்றினார். முனைவர் பி. இராமமூர்த்தி (முன்னாள் முதல்வர் மற்றும் இணைப் பேராசிரியர், ஆங்கிலத் துறை, விவேகானந்த கல்லூரி, திருவேடகம் மேற்கு), முனைவர் டி.ஜே. நாகநாத துரை (இணைப் பேராசிரியர், ஆங்கிலத் துறை மற்றும் கல்வி ஒருங்கிணைப்பாளர், திரவியம் குழுமக் கல்வி நிறுவனம், கைலாசப்பட்டி, பெரியகுளம்), முனைவர் பி. ரமேஷ் (விருந்தினர் பேராசிரியர், ஆங்கிலத் துறை, திரு. ஏ. கோவிந்தசாமி

அரசு கலைக் கல்லூரி, திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம்), திரு. டி. கமலகண்ணன், (விருந்தினர் பேராசிரியர், ஆங்கிலத் துறை, திரு. ஏ. கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரி, திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம்), திரு. டி. கருணாகரன் (விருந்தினர் பேராசிரியர், ஆங்கிலத் துறை, அரசு கலைக் கல்லூரி, கும்பகோணம்), திரு. ஏ. ஆதிநாஷ் (விருந்தினர் பேராசிரியர், ஆங்கிலத் துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கட்டுமன்னார்கோயில், கடலூர்), முனைவர் ஆர். இளங்கோ (ஆட்சிமன்றக்குழுவின் முன்னாள் உறுப்பினர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி, மற்றும் முன்னாள் முதல்வர், ஆங்கிலத் துறை இணைப் பேராசிரியர், விவேகானந்தா கல்லூரி, திருவேடகம் மேற்கு, மதுரை), திரு. ஐ. அமல் ராஜ் (உதவிப் பேராசிரியர், ஆங்கிலத் துறை, லயோலா கல்லூரி, வெட்டவளம், திருவண்ணாமலை), ஆகியோர் முகாமின் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர். முகாமின் போது மூன்றாம் ஆண்டு முதுநிலை மாணவர்களுக்கு “English for Competitive Examinations” எனும் நூல் வழங்கப்பட்டது. முகாமின் இறுதியில் மாணவர்களின் ஆங்கில மொழித்திறன்கள் (கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல்) இணையவழித் தேர்வு வழி மதிப்பிடப்பட்டது.




- 19-06-2025 முதல் 30-06-2025 வரை முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்குப் பொது ஆங்கிலம்-1, பொது ஆங்கிலம்-3 மற்றும் COLLINS COBUILD, அடிப்படை ஆங்கில இலக்கணம்ரூ பயிற்சி வேலைப்புத்தகம் உள்ளிட்ட TANSCHE பாடப் பொருட்கள் வழங்கப்பட்டன.
- 17-07-2025 அன்று “சாதி அடிப்படையிலான மக்கள்தொகை கணக்கெடுப்பின் நன்மைகள் மற்றும் தீமைகள;” என்ற தலைப்பில் குழு விவாத மன்றம், மாலை 06.30 மணி முதல் 8.00 மணி வரை நடைபெற்றது. முனைவர் எஸ். பாரதிராஜா, ஆங்கிலத் துறை தலைவர் (பொ) மற்றும் உசிலம்பட்டி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியின் ஆங்கிலத் துறை உதவிப் பேராசிரியர் திரு. எம். சுபாஷ் ஆகியோர் இந்நிகழ்ச்சியின் மதிப்பீட்டாளர்களாகச் செயல்பட்டனர்.

## கணிதத் துறை

- 16.06.2025 முதல் 28.06.2025 வரை டெல்லியின் ஐஐடி நடத்திய “இளங்கலை கோடைக்கால திட்டம் 2025“ இல் கணிதத் துறை மாணவர் செல்வன் எஸ். ஹரிநாதன் (III பி.எஸ்சி கணிதம்) பங்கேற்றுப் பயிற்சி பெற்றுள்ளார்.
- 23.06.2025 அன்று கணிதத் துறை மாணவர்கள் கல்விச் சுற்றுலாவின் பொருட்டு அழகர் கோவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இக்கோவில் கட்டிடக்கலையின் வடிவமைப்புகளைக் கணிதத்துடன் ஒப்பிட்டு மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.
- 25.06.2025 அன்று, கணிதத் துறையில் “பி.எஸ்.சி கணிதப் பட்டதாரிகளின் உயர் படிப்புகள்“ என்ற தலைப்பில் தொழில் வழிகாட்டுதல் நிகழ்ச்சி, மாணவர்களுக்காக நடத்தப்பட்டது. கணிதத் துறையின் பெருமைமிக்க முன்னாள் மாணவர் (1983 - 1986), முன்னாள் இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் முனைவர் ஜி. சஞ்சீவி, வள நபராகப் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார். கணிதத் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் பி. செல்லப் பாண்டியன் இந்நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தார்.

- கணிதத் துறையின் மாணவர்களுக்காக கணிதக் கழகத்தின் (கணித-இ-கிளப்) திறன்வளர் நிகழ்ச்சி வியாழக்கிழமைதோறும் நடைபெற்று வருகிறது. இதில் பல சிறந்த கணிதவியலாளர்களின் வாழ்க்கை மற்றும் பங்களிப்புகள் குறித்துப் பேராசிரியர்களால் விரிவுரைகள் வழங்கப்பட்டன. மேலும் மாணவர்கள் வினாடி-வினா, ஊமை - சி, படம் வரைதல், குழப்பமான வார்த்தைகள், பேச்சு மற்றும் கட்டுரை வழங்கல் போன்ற நிகழ்ச்சிகளைத் தங்களுக்குள் நடத்தினர்.
- கணிதத் துறை மாணவர்கள் உயர்கல்வி மற்றும் போட்டித் தேர்வுகளில் பங்கேற்று வெற்றிபெற நாள்தோறும் காலை அல்லது மாலை ஒரு மணி நேரம் சிறப்பு வகுப்புகள் நடத்தி பேராசிரியரகள் ஊக்கமளித்து வருகின்றனர்.

## இயற்பியல் துறை

- இயற்பியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் எஸ். கணேசன், ”எதிர்காலக் கல்வியாளர்களுக்கான அதிகாரமளிப்பு: கற்பித்தல், ஈடுபாடு மற்றும் தலைமைத்திறன்” என்ற தலைப்பில், பெரியகுளம் மேரி மாதா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, 09.06.2025 முதல் 13.06.2025 வரை நடத்திய ஐந்து நாள் தேசிய அளவிலான ஆசிரியர் மேம்பாட்டு நிகழ்ச்சியில் (குனீ) கலந்து கொண்டார்.
- 26.06.2025 அன்று இயற்பியல் துறை மாணவர்களின் மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி ‘வியாழக் கூட்டம;’ என்ற பெயரில் நடைபெற்றது. இயற்பியல் துறையின் இரண்டாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, திருக்குறள், இவ்வாரச் சட்டம், கட்டுரை வாசிப்பு, அறிவியல் செய்திகள் மற்றும் வினாடி வினா போன்ற நிகழ்ச்சிகளை வழங்கினர்.

## முது அறிவியல் மற்றும் ஆராய்ச்சி வேதியியல் துறை

- 01.06.2025 முதல் 04.06.2025 வரை, வேதியியல் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் ஜி. ராஜ்குமார், பேராசிரியர் ராமசுப்பு ஜெயராமன் அறிவியல் பவுண்டேஷன் (RJSF), சென்னை கிறிஸ்தவக் கல்லூரி மற்றும் அப்துல் கலாம் விஷன் இந்தியா மூவ்மென்ட் ஆகியவற்றின் கூட்டுத் திட்டமான வேதியியல் ஆராய்ச்சி இயக்கம் (CRD-25) நிகழ்ச்சியில் விருந்தினர் வள நபராகச் செயலாற்றினார். இந்த நிகழ்ச்சி சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்றது.
- 02.06.2025 முதல் 06.06.2025 வரை, வேதியியல் துறையின் தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர் டாக்டர் பி. சேர்வாரமுத்து, சி-டாக் (C-DAC) ஹைதராபாத் மற்றும் விவேகானந்த கல்லூரி, திருவேடகம் மேற்கு இணைந்து நடத்திய, Government Officer Training – Advanced on Additive Manufacturing Technologies and Applications என்ற பயிற்சியை, வெற்றிகரமாக முடித்தார்.
- 09.06.2025 முதல் 13.06.2025 வரை, வேதியியல் துறையின் உதவிப் பேராசிரியர்கள் முனைவர் ஏ. கண்ணன் மற்றும் முனைவர் டி. திருப்பதி, பெரியகுளம் மேரி மாதா கல்லூரி நடத்திய ஐந்து நாள் ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சியில் பங்கேற்றனர்.
- 13.06.2025 அன்று, வேதியியல் துறையின் தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர் டாக்டர் பி. சேர்வாரமுத்து, தேசிய உணவு தொழில்நுட்பம், தொழில் முனைவோர் மற்றும் மேலாண்மை நிறுவனம் (NIFTEM-T) தஞ்சாவூர், உணவு தொழிற்சாலை செயல்பாடுகள், இன்க்யூபேஷன் மற்றும் தொழில் முனைவோர் துறை (FPOIE) நடத்திய “பூண்டின் செயலாக்கம் மற்றும் மதிப்பு கூட்டுதல;” குறித்த ஒருநாள் இணையவழிப் பயிற்சியை நிறைவு செய்தார்.

## தாவரவியல் துறை

- 20.06.2025 அன்று தாவரவியல் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் ஜி. முத்துக்குமார் சிவகங்கை மாவட்டம் பிள்ளையார்பட்டியிலுள்ள பஞ்சாப் தேசிய நேசனல் வங்கி “காளான் வளர்ப்பு“ குறித்து நடத்திய பயிற்சியில் பங்கேற்றார்.
- 26.06.2025 அன்று தாவரவியல் துறையின் இளமறிவியல் மூன்றாமாண்டு மாணவர்கள் அனைவரும் சிவகங்கை மாவட்டம் பிள்ளையார்பட்டி பஞ்சாப் தேசிய நேசனல் வங்கியிலுள்ள காளான் வளர்ப்புப் பண்ணைக்குச் சென்று காளான் வளர்ப்புக் குறித்துப் பயிற்சிபெற்று வந்தனர்.

## முது அறிவியல் மற்றும் ஆராய்ச்சி விலங்கியல் துறை

- முது அறிவியல் மற்றும் ஆராய்ச்சி விலங்கியல் துறைத் தலைவர் மற்றும் உதவிப் பேராசிரியர் முனைவர் கே. ரமேஷ் குமார், கேரளாவின் ஏ.சி.டி அகாடமியால் 29.05.2025 முதல் 03.06.2025 வரை ஏற்பாடு செய்யப்பட்ட ”எதிர்காலத்திற்குத் தயாராக கற்பித்தல்: கருவிகள், நுட்பங்கள் மற்றும் பயனுள்ள கற்றலுக்கான மாற்றங்கள்” என்ற தலைப்பில் நடத்தப்பட்ட ஐந்து நாள் தேசிய அளவிலான ஆசிரிய மேம்பாட்டுத் திட்டத்தில் கலந்து கொண்டார்.
- முது அறிவியல் மற்றும் ஆராய்ச்சி விலங்கியல் துறை உதவிப் பேராசிரியர் திரு. டி,ஏ. கோகுல், கேரளாவின் ஏ.சி.டி அகாடமியால் 29.05.2025 முதல் 03.06.2025 வரை ஏற்பாடு செய்யப்பட்ட ”எதிர்காலத்திற்குத் தயாராகக் கற்பித்தல்: கருவிகள், நுட்பங்கள் மற்றும் பயனுள்ள கற்றலுக்கான மாற்றங்கள்” என்ற தலைப்பிலான ஐந்து நாள் தேசிய ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டத்தில் கலந்து கொண்டார்.
- முது அறிவியல் மற்றும் ஆராய்ச்சி விலங்கியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர். எஸ். செல்வராஜ் 15.05.2025 முதல் 07.06.2025 வரை பாட்னாவின் IIT, விஷலேசன் i-HUB ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட ”கல்வியாளர்களுக்கான AI தேர்ச்சி” என்ற தலைப்பிலான ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டத்தில் கலந்து கொண்டார்.
- முது அறிவியல் மற்றும் ஆராய்ச்சி விலங்கியல் துறை, ”விலங்கியல் துறையில் தொழில் எல்லைகளை ஆராய்தல்” என்ற தலைப்பில் 19.06.2025 அன்று தொழில் வழிகாட்டுதல் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. இதில் திரு. ஏ. ராமநாராயணன் (ஆராய்ச்சி அறிஞர், உயிரியல் அறிவியல் பள்ளி, ஐஐடி, புது தில்லி) வள நபராகப் உரையாற்றினார்.
- உலக ஒட்டக தினத்தை நினைவுகூரும் வகையில், முது அறிவியல் மற்றும் ஆராய்ச்சி விலங்கியல் துறையில் 26.06.2025 அன்று டீழைவசயஉம அநநவ-ஐ நடத்தப்பட்டது.
- முது அறிவியல் மற்றும் ஆராய்ச்சி விலங்கியல் துறை & Eco-Star Club இன் ஏற்பாட்டில் அனைத்து விலங்கியல் துறை மாணவர்களும் "Forest Trails" என்ற நிகழ்வின் மூலமாக மதுரை அழகர் மலைக்கு 28.06.2025 அன்று அழைத்துச் செல்லப்பட்டனர்.

## முதுகலை மற்றும் ஆராய்ச்சி வணிகவியல் துறை

- 28.06.2025 அன்று முதுகலை மற்றும் ஆராய்ச்சி வணிகவியல் துறையில் ஏற்பாடு செய்த ஒருநாள் பயிற்சிப்பட்டறையில் மானாமதுரை அரசு கலைக் கல்லூரியின் வணிகவியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் எஸ். செண்பகனாதன் வளநபராகக் கலந்துகொண்டு வணிகவியல் துறை மாணவர்களுடன் “Project Work Preparation: Tips and Techniques for Academic Success” என்ற தலைப்பில் கலந்துரையாடினார்.
- 28.06.2025 அன்று முதுகலை மற்றும் ஆராய்ச்சி வணிகவியல் துறையில் ஏற்பாடு செய்த ஒருநாள் பயிற்சிப்பட்டறையில் கோயம்பத்தூர் ஆக்கம் குருப்ஸ் & இன்ஸ்டிடியூசனனின் நிறுவனர் திரு. எஸ். அழகுபாண்டி வளநபராகக் கலந்துகொண்டு “Excel Unleashed: From Basics to AI-Driven Insights” என்ற தலைப்பில் இரண்டாமாண்டு வணிகவியல் மாணவர்களுக்கு சிறப்பு வகுப்பெடுத்தார்.

## கணினி அறிவியல் துறை

- 17.06.2025 அன்று கணினி அறிவியல் துறையின் சி.எஸ் ஸ்மார்ட் வகுப்பறையில் “நாஸ்டால்ஜியா” என்ற முன்னாள் மாணவர் சிறப்பு சொற்பொழிவு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் முன்னாள் மாணவர் ஸ்ரீ ராஜேஷ் சுகுமாரன் (1994-97) (மூத்த மேலாளர், அமெரிக்கன் எக்ஸ்பிரஸ், அமெரிக்கா) மற்றும் அவரது சகோதரர் ஸ்ரீ வினோத் சுகுமாரன், ஏகன் குளோபல் , கோவை ஆகியோர் தங்களது தொழில்முறை அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டும், ஐடி துறையில் கிடைக்கும் பல்வேறு தொழில் வாய்ப்புகளைப் பற்றியும் மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் சொற்பொழிவாற்றினர்.

## வணிகவியல் துறை (கணினி பயன்பாடுகள்)

- 21.06.2025 அன்று வணிகவியல் (கணினி பயன்பாடுகள்) துறையில; “Agile முறையைப் பயன்படுத்தி செயலி உருவாக்குதல்” என்ற தலைப்பில் ஒருநாள் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் மதுரையைச் சேர்ந்த யாதவர் கல்லூரி வணிகக் கணினி

மையத்தின் உதவிப் பேராசிரியர் முனைவர் எஸ். பாண்டிகுமார் அவர்கள் வளநபராகச் செயல்பட்டார்.

- 27.06.2025 அன்று வணிகவியல் துறை (கணினி பயன்பாடுகள்), மாணவர்களின் ஏற்பாட்டில் (வாரந்தோறும் நடைபெறும்) தனிநபர் மேம்பாட்டு நிகழ்வு (Personality Development Programme - 1) நடைபெற்றது. அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் வாராந்திர செய்தி வாரியம் (ஆங்கிலம்), வணிக வினாடி வினா (Business Quiz)> நான் யார்? (Who am I?)> ஆய்வுக் கட்டுரை அளிப்பு (Paper Presentation)> புத்தக வாசிப்பு (Book Reading)> திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி (Skill Development Programme) போன்ற நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.

**உடற்கல்வித் துறை**



- 20.06.2025 அன்று உடற்கல்வித் துறை மற்றும் IQAC இணைந்து ஏற்பாடு செய்த சிறப்பு நிக்ழ்ச்சியில் மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இலவச ஆரோக்கிய ஆலோசனைகள், உடல் நிலை மதிப்பீடுகள் மற்றும் உடற்பயிற்சி வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன. மேலும் உடற்கல்வித் துறை மற்றும் ஐஞயுஊ இணைந்து ஆரோக்கியம் மற்றும் நலனை மேம்படுத்தும் நிகழ்வை நடத்தியது. இதில் பணிமுனைகள், குழுப் பயிற்சிகள் மற்றும் மன அழுத்த மேலாண்மைப் பயிற்சிகள் இடம்பெற்றன.

- 21.06.2025 அன்று சர்வதேச யோகா நாளை முன்னிட்டு கல்லூரியின் மைதானத்தில் யோகா அமர்வு நடைபெற்றது. இதில் கல்லூரியின் செயலர் சுவாமி, குலபதி சுவாமி, கல்லூரியின் முதல்வர் (பொ), பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டு யோகா பயிற்சிகளைச் செய்தனர். இந்நிகழ்வு உடல் மற்றும் மன நலனையும், ஒருமைப்பாட்டையும் ஊக்குவிக்கும்விதமாக இருந்தது. இதில் கல்லூரியின் பெருமைமிகு முன்னாள் மாணவர் (B.Sc. Physics 1980-1983) மற்றும் காங்கேயம் ஜி.எஸ். விளையாட்டுக் கல்வி நிறுவனத்தின் முன்னாள் பேராசிரியர் மற்றும் இயக்குநர் முனைவர் பி.வி செல்வம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு ஊக்கவுரையாற்றினார்.



## அகத்தர உறுதி மையம்

- 21.06.02025 அன்று மாணவர்களின் வேலைவாய்ப்பு திறன்களை மேம்படுத்தும் திறன் மேம்பாட்டுத் திட்ட நிகழ்ச்சியினைக் கல்லூரியின் அகத்தர உறுதி மையம் நடத்தியது. இதில் தொடர்புத் திறன், குழுப்பணி மற்றும் அடிப்படை தொழில்நுட்பத் திறன்கள் ஆகியவற்றின் அவசியம் குறித்து மாணவர்களுடன் கலந்துரையாடப்படது.



## விரிவாக்க செயல்பாடுகள்

- கல்லூரியின் சார்பாக கல்லூரியின் இளநிலை உதவியாளர் திரு பா.கார்த்திகேயா மதுரை தானம் அறக்கட்டளைகள் படிப்பு மைய மாணவர்களுக்கு (PDM 23 & PIM 02) ஜூன் 3, 5, 12, 14, 18, 19, 24, மற்றும் 26 ஆகிய தேதிகளில் காலை 6 மணி முதல் 7 மணி வரை யோகா வகுப்புகள் எடுத்தார்.



************************

## மலர் குழுவினர்

| | |
|---|---|
| சுவாமி வேதானந்த | செயலர் |
| சுவாமி அத்யாத்மானந்த | குலபதி |
| முனைவர் கோ. கார்த்திகேயன் | பதிப்பாசிரியர் |
| முனைவர் சு. ஸ்ரீதர் சுவாமிநாதன் | அகத்தர உறுதி மைய ஒருங்கிணைப்பாளர் |
| முனைவர் க. அசோக் குமார் | குருகுலச் சுடர் ஒருங்கிணைப்பாளர் |
| முனைவர் சு. முத்தையா | மெய்ப்புத் திருத்துநர் |

**ஆசிரியர் குழு**

| பொறுப்பாசிரியர்/ ஒருங்கிணைப்பாளர் | துறை |
|---|---|
| முனைவர் கோ. பாலமுருகன் | தமிழ்த் துறை |
| முனைவர் ச. பாரதிராஜா | ஆங்கிலத் துறை<br>குழு கலந்துரையாடல் மன்றம் |
| முனைவர் சு. ஸ்ரீரீதர் சுவாமிநாதன் | சமஸ்கிருதத் துறை<br>அகத்தர உறுதி மையம் |
| முனைவர் ம. அருள்மாறன் | பொருளியல் துறை<br>நுண்கலை மன்றம்<br>நாட்டு நலப்பணித் திட்டம், |
| திரு வீ. முருகன் | வரலாற்றுத் துறை<br>விவேகானந்த படிப்பகம்<br>இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் |
| முனைவர் மு. மோகன் | முதுகலை மற்றும் ஆராய்ச்சி வணிகவியல் துறை |
| முனைவர் ம. நாகராஜன் | கணிதத் துறை |
| முனைவர் ந. மீனாட்சி சுந்தரம் | இயற்பியல் துறை |
| முனைவர் த. திருப்பதி | முதுஅறிவியல் மற்றும் ஆராய்ச்சி வேதியியல் துறை |
| முனைவர் த. செல்லத்துரை | தாவரவியல் துறை |
| முனைவர் ச. செல்வராஜ் | முதுஅறிவியல் மற்றும் ஆராய்ச்சி விலங்கியல் துறை |
| திரு சு. முத்துகணேஷ் | கணினி அறிவியல் துறை |
| திரு ரா. கார்த்திகேயன் | கணினிப் பயன்பாட்டு வணிகவியல் துறை |
| முனைவர் ஜெ. நிரேந்தன் | விளையாட்டுத் துறை |
| முனைவர் மீ. பிரபாகரன் | நூலகத் துறை |
| முனைவர் பா. சேர்வாரமுத்து | DBT நட்சத்திரக் கல்லூரி திட்டம் |
| முனைவர் க. ராஜ்குமார் | SWAYAM |
| கேப்டன் வே. ராஜேந்திரன் | தேசிய மாணவர் படை |
| முனைவர் மு. கணபதி | செஞ்சுருள் சங்கம்<br>வாழ்க்கை வழிகாட்டி மையம்<br>வேலைவாய்ப்பு மையம் |
| முனைவர் க. செல்லப்பாண்டியன் | தொழில்முனைவோர் மையம்<br>ஆலோசனை மையம் |
| முனைவர் கு. ராமர் | பாரதி சிந்தனை அரங்கம் |
| முனைவர் சி. வடிவேல் | நுகர்வோர் சங்கம்,<br>உன்னத் பாரத் அபியான். |
| முனைவர் பா. மாரிமுத்து | கிராமத் தத்தெடுப்புத் திட்டம், |
| முனைவர் மா. பவுன்ராஜ் | புதுமை கண்டுபிடிப்பு மையம் |
| முனைவர் கா. ரமேஷ்குமார் | ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் |
| முனைவர் கா. காமாட்சி | கல்லூரியின் விரிவாக்கச் செயல்பாடுகள் |
| திரு நெ.சி. லக்ஷ்மிகாந்தன் | நரேன் ஐ.ஏ.எஸ் அகாடெமி<br>பொது அறிவு வகுப்பு |
| திரு பா. கார்த்திகேயா | வலை பதிவர் |
| திரு ரா. கார்த்திகேயன் | வலை பதிவர் |